(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO**. 387/2019 அ.சா.9

| | | |
|---|---|---|
| Name | : | **திரு.** டாக்டர்**.** காதர் மைதீன் |
| Father's name | : | |
| Village | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.07.2026.

**( எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடி அரசு மனநல மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 13.07.2019–ம் தேதியன்று மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது காலை 05.30 மணியளவில் மதுரை அவனியாபுரம் செம்பூரணி கரையைச் சேர்ந்த கணேசன் என்பவரது மகன் வினோத் 25 மதிப்புடையவரை அவருடைய தாயார் சின்னப்பேச்சி 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்காக அழைத்து வந்திருந்தார். காயம்பட்ட நபரை பரிசோதிக்கும்போது அவர் சுயநினைவுடன் இல்லை. அவருடைய தாயாரை விசாரித்தபோது வினோத் என்பவரை அடையாளம் தெரிந்த ஒரு நபர் இனம் காணமுடியதா ஆயுதத்தால் மேற்படி தேதியில் காலை 04.00 மணியளவில் அவருடைய வீட்டில் வைத்து தாக்கியதாக கூறினார். காயம்பட்ட நபர் வலி உணர்விற்கு மட்டும் உடலில் அசைவு இருந்தது. காயம்பட்ட நபருக்கு பின்வரும் காயங்கள் இருந்தன.

1. தலையின் முன்பகுதியில் இரண்டு கிழிந்த காயங்கள் காணப்பட்டது. அளவு 5x1x1 செ.மீ, 8x2x2 செ.மீ.
2. மேல் உதட்டில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. அளவு 4x2x2 செ.மீ

அளவில் இருந்தது. காயம்பட்ட நபருக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக Triage ward–ல் உள்நோயாளியாக அனுமதித்தேன். இது சம்பந்தமாக காவல்துறையினருக்கு தகவல் தெரிவித்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

நான் பரிசோதித்த நபருக்கு ஏற்பட்ட 2 காயங்களும் கற்கள் போன்ற ஆயுதத்தால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

Sd/– டாக்டர். காதர் மைதீன்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.07.14 19:14:40 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.